22.03.2024.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 24/2016**

அ.சா.**10**

பெயர். திரு. முருகன்

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

சம்பவ இடத்திற்கு விடியற்காலை 3.30 மணிக்கு ஆம்புலன்சில் ஏற்றியபோது நான் இருந்தேன். அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை குறித்து எனக்கு நேரில் எதுவும் தெரியாது. நான் அப்போது கொல்லையில் இருந்தேன். என்னை போலீசார் எவ்வளவு நாள் கழித்து எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அன்றே சம்பவ இடத்தில் விடியற்காலை 3 அல்லது 3.30 மணிக்கு விசாரித்தார்கள். நான் அந்த இடத்திற்கே செல்லவில்லை என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், போலீசார் என்னை விசாரித்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.